## 2.1 1997–1998 ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ.25.00 லட்சம் ஒதுக்கீடு மற்றும் வழிகாட்டி நெறிமுறைகள்

திட்டம் மற்றும் வளர்ச்சி (மா.தி–2) துறை

அரசாணை (நிலை) எண்.84 நாள் : 14.07.1997

படிக்க :

1) அரசு ஆணை(நிலை) எண்.83, திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை(மா.தி)துறை நாள்.26.05.1993
2) அரசு ஆணை(நிலை) எண்.148, திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை(மா.தி) துறை, நாள்.27.08.1993
3) அரசு ஆணை(நிலை) எண்.17, திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை(மா.தி)துறை, நாள்.11.02.1994
4) அரசுக் கடிதம் எண்.3349/மாதி/94–2, திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை, நாள்.30.05.1994
5) அரசு ஆணை(நிலை) எண்.115, திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை(மா.தி)துறை நாள்.08.08.1994
6) அரசு ஆணை(நிலை) எண்.104, திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை(மா.தி)துறை நாள்.22.08.1995
7) அரசு ஆணை(நிலை) எண்.105, திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை(மா.தி)துறை நாள்.22.08.1995
8) அரசு ஆணை(நிலை) எண்.156, திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை(மா.தி)துறை நாள்.13.12.1995
9) அரசு ஆணை(நிலை) எண்.82, திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை(மா.தி)துறை நாள்.09.08.1996
10) அரசு ஆணை(நிலை) எண்.249, நிதித்(வருவாய் ஆதாரங்கள்) துறை(மா.தி)துறை நாள்.12.05.1997
11) அரசுக் கடிதம் எண்.13998/வருவாய் ஆதாரம்/97–3, நிதித்(வருவாய் ஆதாரங்கள்) துறை, நாள். 14.05.1997
12) உறுப்பினர்–செயலர், மாநில திட்டக்குழு, சென்னை–5 அவர்களின் கடிதம் எண்.1080/மாதிகு/மா.தி/ 96, நாள்.07.04.1997

**ஆணை**

மாவட்ட பரவலாக்கப்பட்டத் திட்டம் 1993–94ம் வருடம் ரூபாய் 20 கோடி நிதி ஒதுக்கீட்டில் சென்னை மாவட்டத்தைத் தவிர இதர மாவட்டங்களில் ஊரக மற்றும் நகர்ப்புற மக்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்றும் வகையில் ஆரம்பிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு 1994–95ஆம் வருடம் ரூ.40 கோடியும், 1995–96ஆம் வருடம் ரூ.50 கோடியும், 1996–97ஆம் வருடம் ரூ.60 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1997–98ஆம் நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டிற்கு ரூ.58.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து 1997–98ஆம் ஆண்டிற்கு மாவட்ட பரவலாக்கப்பட்டத் திட்டத்திற்கு ரூ.35.00 கோடியினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

### 2. 1997–98ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு

மாவட்டப் பரவலாக்கப்பட்டத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூபாய் 35.00 கோடியில் 50 விழுக்காடு மக்கள் தொகை அடிப்படையிலும், 50 விழுக்காடு பின்தங்கிய நிலையையும் அளவுகோலாகக் கொண்டு சென்னை மாவட்டம் உட்பட எல்லா மாவட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாவட்ட வாரியான நிதி ஒதுக்கீடு பிற்சேர்க்கை 1ல் இணைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினம் கீழ்கண்ட தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

> “2515 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள்–101 ஊராட்சி நிறுவனம்–ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II–மாநில திட்டம்–ஜே.எஃப்–பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டத்திற்காக உள்ளாட்சிமன்றங்களுக்கு நிதியுதவி–09– உதவி மானியங்கள் (கு.தொ.கு.எண்.2515.00.101. ஜே.எஃப்..0903. ”

### 3. நிதியை பெற்றுக் கொள்ளலும், திட்டப் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்தலும்.

மாவட்டப் பரவலாக்கப்பட்டத் திட்டத்தின் கீழ் மாவட்டங்களுக்கு ஒப்பளிக்கப்படும் நிதி சம்பந்தப்பட்ட ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கு மாவட்ட ஆட்சியர் நிதியைப் பெற்று சம்பந்தப்பட்ட நிர்வாக அலுவலர், ஆணையர்கள் அவர்களுக்கு வழங்குவார். இந்நிதி அஞ்சல் அலுவலக சேமிப்புக் கணக்கில் பராமரிக்கப்படும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளான ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றிற்கு மாவட்டப் பஞ்சாயத்துகள் திட்டங்களை தேர்வு செய்து மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளான பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி ஆகியன தங்களுக்கு வேண்டிய திட்டங்களைத் தேர்வு செய்து மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கும். இறுதியில் மாவட்ட ஆட்சியர் ஒப்புதலளித்து திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு

அடிப்படையில் நிதியை பகிர்ந்தளிப்பார். மாவட்டப் பரவலாக்கப்பட்டத் திட்ட ஒதுக்கீட்டில், 60 விழுக்காடு மாவட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கும், 40 விழுக்காடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் செலவிடப்படும்.

**4**. 1997–98ஆம் ஆண்டு மாவட்டப் பரவலாக்கப்பட்டத் திட்டம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட செயல்பாட்டிற்கு கீழ்கண்ட வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்படுகின்றன.

(1) ஒப்பந்தப்புள்ளி கோருதல்

ஒப்பந்தப்புள்ளி கோருதல், முடிவு செய்தல் பேன்ற பணிகள் மேலே இரண்டு மற்றும் ஆறாவதாகப் படிக்கப்பட்ட ஆணையின்படி மேற்கொள்ளப்படவேண்டும்.

(2) பணிகளைத் தேர்வு செய்தல்

சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் தேர்வு செய்யக்கூடாத பணிகள் பிற்சேர்க்கை 2ல் சேர்க்கப்பட்டுள்ளது. இப்பணிகள் மாவட்டப் பரவலாக்கப்பட்டத் திட்டத்தின் கீழும் தேர்வு செய்யப்படமாட்டாது. மாவட்டப் பரவலாக்கப்படும் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு திட்டப் பணிக்கான செலவு ரூ.10இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். மாவட்டப் பரவலாக்கப்பட்டத் திட்ட ஒதுக்கீட்டில் 20 விழுக்காடுக்கு மிகாமல் சாலை வசதிகளுக்கு பயன்படுத்த வேண்டும்.

(3) திட்டப் பணிகளை ஆய்வு செய்தலும் மேற்பார்வையிடுதலும்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்படும் திட்டச் செயல்பாட்டை மாவட்ட பஞ்சாயத்து அமைப்புகள் விவாதிக்கும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்படும் திட்டத்தை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளே கண்காணிக்கும். இந்த திட்ட செயல்பாடு குறித்த மாதாந்திர அறிக்கையை மாவட்ட ஆட்சியர் அடுத்து வரும் மாதங்களில் 5ஆம் நாளுக்குள் மாநில திட்டக் குழுவிற்கு அனுப்புவார். சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களும், ஊரக வளர்ச்சித் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையைச் சேர்ந்த அதிகாரிகளும், அரசு அதிகாரிகளும் இந்தத் திட்டப் பணிகளை அவ்வப்போது பார்வையிடுவர். மாநிலத் திட்டக்குழுவும், இத்திட்டச் செயல்பாட்டை பார்வையிட்டு அவ்வப்போது ஆய்வு செய்யும்.

(4) திட்டச் செயல்பாடு

மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒப்பளிக்கப்பட்ட ஊரக மற்றும் நகர்ப்புற திட்டங்கள் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிகள் துறை, பொதுப்பணித்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சிநிர்வாகத்துறை, பேரூராட்சிகள் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், கட்டிட மையம் போன்ற துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும்.

(5) மேற்பார்வையிடுதல் மற்றும் துறைக்கான செலவு (Supervision & Centage Charges)

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் கட்டிட மையம் போன்ற துறைகள் மேற்கொள்ளும் பணிகளுக்கு மேற்பார்வையிடுதல் செலவு மற்றும் கட்டணச் செலவு மாவட்ட பரவலாக்கப்பட்டத் திட்டப் பணியினுள் அடங்கும். அரசுத் துறைகளான பொதுப்பணித்துறை. நெடுஞ்சாலைத்துறை மற்றும் ஊரகப் பணித் துறை, ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி நிர்வாகத்துறை, பேரூராட்சித் துறை போன்றவைகளுக்கு மேற்பார்வையிடுதல் செலவு மற்றும் கட்டணச் செலவு வழங்கப்பட மாட்டாது.

(6) பொது

கணக்கு மற்றும் தணிக்கை, மேற்பார்வை மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு மேலே இரண்டு மற்றும் ஏழு ஆகிய அரசு ஆணைகளைப் பின்பற்ற வேண்டும்.

**5. சென்னை மாவட்ட ஒதுக்கீடு**

1997–98ம் ஆண்டு மாவட்டப் பரவலாக்கப்பட்டத் திட்டத்தின் கீழ் ரூ.142.69 இலட்சம் சென்னை மாவட்டத்திற்க ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரை சென்னை மாநகராட்சியே மாநகரப் பணிகளைக் கவனித்து வருவதால், சென்னை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியை சென்னை மாநகர ஆணையர் பெற்றுக் கொண்டு அஞ்சலக சேமிப்புக் கணக்கில் கணக்கு வைத்து வர வேண்டும். அந்நிதியைக் கொண்டு மாநகராட்சி மன்றம் தேர்ந்தெடுத்து ஒப்புதல் வழங்கும் பணிகளுக்கு சென்னை மாநகர ஆணையர் நிதி ஒதுக்கீடு செய்வார். ஒப்பந்தப்புள்ளி, கணக்கு மற்றும் தணிக்கை போன்றவற்றிற்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையைப் பின்பற்ற வேண்டும்.

**6. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1997–98 ஆம் ஆண்டிற்கு ரூ.58.75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், ரூ.6.50 இலட்சம் சாலை வசதிக்காகவும், ரூ.6.50 இலட்சம் தண்ணீர் வசதிக்காகவும், செலவிட வேண்டும். மீதி ரூ.12 இலட்சத்திற்கு பிற்சேர்க்கை 2–ல் குறிப்பிடப்பட்ட பணிகளைத் தவிர்த்து அவர்கள் விருப்பப்படி திட்டங்களை தேர்வு செய்து கொள்ளலாம். சட்டமன்ற உறுப்பினர் ஒவ்வொருவரும் திட்டப் பணிகளைத் தேர்வு செய்து, மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிப்பர். மாவட்ட ஆட்சித் தலைவர் அத்திட்டங்களை நிறைவேற்றுவார். ஒப்பந்தப்புள்ளி கோருதல், மாநிலத் திட்டக் குழுவிற்கு அறிக்கை அனுப்புதல், கணக்கு மற்றும் தணிக்கை முறைகள் போன்றவற்றை கடைபிடிப்பதற்காக மாவட்டப் பரவலாக்கப்பட்டத் திட்டத்திற்கான வழிமுறைகள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டிற்கும் பின்பற்றப்படவேண்டும்.

**7.** மேலே 10–வதாகப் படிக்கப்பட்ட அரசு ஆணை மற்றும் 11வதாகப் படிக்கப்பட்ட அரசுக் கடிதம் ஆகியவைகளின்படி, உறுப்பினர்–செயலாளர், மாநிலத் திட்டக்குழு சென்னை–5 அவர்கள் தேவையான பரிந்துரைகளை திருத்திய மதிப்பீடு / இறுதி மதிப்பீடு 1997–98ஆம் ஆண்டுக்கு நிதித்துறைக்கு அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**8.** இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண்.3284/நிசெ./97 நாள்.07.07.1997–ல் பெறப் பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கே.ஏ.மாத்யூ**
அரசு செயலாளர்

## 2. MLACDS

**பிற்சேர்க்கை–1**

மாவட்டப் பரவலாக்கப்பட்டத் திட்டம் 1997–98 மாவட்ட வாரியான நிதி ஒதுக்கீடு

| வ.எண். | மாவட்டங்கள் | நிதி ஒதுக்கீடு (1997–98) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1. | சென்னை | 142.69 |
| 2. | காஞ்சிபுரம் | 97.92 |
| 3. | திருவள்ளூர் | 92.60 |
| 4. | கடலூர் | 112.82 |
| 5. | விழுப்புரம் | 146.53 |
| 6. | வேலூர் | 188.20 |
| 7. | திருவண்ணாமலை | 156.87 |
| 8. | சேலம் | 136.91 |
| 9. | நாமக்கல் | 65.90 |
| 10. | தர்மபுரி | 184.84 |
| 11. | ஈரோடு | 154.90 |
| 12. | கோயம்புத்தூர். | 132.26 |
| 13. | நீலகிரி | 93.75 |
| 14. | தஞ்சாவூர் | 111.44 |
| 15. | நாகப்பட்டினம் | 74.71 |
| 16. | திருவாரூர் | 59.68 |
| 17. | திருச்சிராப்பள்ளி | 110.88 |
| 18. | கரூர் | 43.66 |
| 19. | பெரம்பலூர் | 57.00 |
| 20. | புதுக்கோட்டை | 147.18 |
| 21. | மதுரை | 130.14 |
| 22. | தேனி | 61.08 |
| 23. | திண்டுக்கல் | 172.19 |
| 24. | இராமநாதபுரம் | 147.51 |
| 25. | விருதுநகர் | 109.65 |
| 26. | சிவகங்கை | 118.86 |
| 27. | தூத்துக்குடி | 137.47 |
| 28. | திருநெல்வேலி | 162.82 |
| 29. | கன்னியாகுமரி | 149.54 |
| | மொத்தம் | 3500.00 |

**கே.ஏ.மாத்யூ**
அரசு செயலாளர்

**பிற்சேர்க்கை–2**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மாவட்ட பரவலாக்கப்பட்டத் திட்டம் (1997–98) ஆகிய திட்டங்களின் கீழ் தேர்வு செய்யக்கூடாத பணிகள்.

1. மத்திய, மாநில அரசுகளின் அலுவலகங்களுக்கும், அரசுத் துறைகள், முகமைகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் அலுவலகங்களுக்கும் பணியாளர் குடியிருப்புகளுக்கும் கட்டிடம் கட்டுதல்.
2. வணிக நிறுவனங்கள், அறநிறுவனங்கள், பதிவு பெற்ற சங்கங்கள், தனியார் நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவை தொடர்பான வேலைகள் செய்தல்.
3. நீண்டகாலம் பயன்படும் சொத்துக்களை புதுப்பித்தல், தர மேம்பாடு செய்தல் முதலியவைகளுக்கான சிறப்பு பழுது பார்த்தல் பணிநீங்கலாக மற்ற பொது பழுது பார்ப்புப் பணிகளையும் நிர்வாக பணிகளையும் மேற்கொள்ளல்.
4. மானியங்களும், கடன்களும் வழங்குதல்.
5. நினைவுச் சின்னங்களும், நினைவு மண்டபங்களும் கட்டுதல்.
6. இருப்பு செய்யத்தக்க எந்தவிதமான பொருட்களையும் வாங்குதல்.
7. நில எடுப்புக்கும், நில எடுப்புக்கு இழப்பீடு வழங்குவதற்கும் செலவிடல்.
8. அனுமதி அளிக்கப்பட்ட திட்டங்களின் ஒரு பகுதியாக அமைவது நீங்கலாக தனிப்பட்ட ஒருவருக்கு ஆதாயம் அளிக்கக் கூடிய சொத்துக்களுக்குச் செலவிடல்.
9. மத வழிபாட்டு இடங்களுக்குச் செலவிடல்.

**கே.ஏ.மாத்யூ**
அரசு செயலாளர்